**காலி மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

காலி மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, காலி மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திட்டமுறைசார் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாநகர சபைக்கு வெகுமதியாக கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 1,855,456 தொகை சொத்துக்கள் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ii) | 2021 ஆண்டின் போது சபையினால் கொள்வனவு செய்திருந்த 03 வாயுசீராக்கிகளின் பெறுமதியாகிய ரூபா 457,470 தொகை செலவு என பதிவழிக்கப்பட்டிருந்தன. | | |
| (iii) | 2016 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை நீதிமன்றத் தண்டப்பணம் குறை ஒதுக்கம் ரூபா 42,656,469 தொகை மற்றும் 2020 ஆண்டின் மிகை ஒதுக்கம் ரூபா 16,583,912 தொகை கணக்குகளுடன் பொருந்தாமையால் திரண்ட நிதியம் ரூபா 26,072,557 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை முத்திரைக் கட்டணம் மிகை ஒதுக்கம் ரூபா 232,252,745 தொகையினை கணக்கீடு செய்யாமையால் திரண்ட நிதியம் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (v) | ரூபா 4,584,070 தொகை பெறுமதியான 18 வாகனங்கள் மற்றும் கிரயத்தை இனங்காண முடியாத 19 வாகனங்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றை நிலையான சொத்துக்கள் கணக்கிலிருந்து அகற்றுவதற்கு மற்றும் கிடைத்த இலாபம் அல்லது நட்டத்தை கணித்து கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை. | | |
| (vi) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நகர பொறியியலாளர் (இயந்திரவியல்) திணைக்களத்தில் காணப்பட்ட மீதிகளை பிரித்தெடுக்கும் போது கடன் கொடுத்தோர் செலவு ரூபா 25,051,747 தொகை மிகையாக பதிவு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை ஆண்டின் மிகை சமமான பெறுமதியினால் குறைவாகவும், வருட இறுதியில் உள்ள கடன் கொடுத்தோர் மீதி சமமான பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரிசெய்ய நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (vii) | மீளாய்வாண்டு இறுதியளவில் இரத்துச் செய்யப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 4,323,235 தொகை நடைமுறை ஆண்டின் செலவு மற்றும் கடன்கொடுத்தோர் என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறை ஆண்டின் செலவு மற்றும் கடன்கொடுத்தோர் சமமான பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (viii) | மீளாய்வாண்டு இறுதியளவில் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த கூட்டுத்தொகை ரூபா 4,162,152 தொகைக்கான 05 செயற்திட்டங்கள் தொடர்பாக கடன்கொடுத்தோர் மற்றும் செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 12 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 29,115,991 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சமமின்மைகளை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2003 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 111,553 தொகைக்கான தொங்கல் கணக்கின் மீதி மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br><br>(ஆ) 2006 ஆண்டு முதல் தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காணப்படும 03 கணக்குகளின் வரவுக் கூட்டுத்தொகை ரூபா 42,103,545 தொகை மற்றும் கணக்கு ஒன்றின் செலவு மீதி ரூபா 43,062,414 தொகையினை அறுதியாக இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மீதி தொடர்பாக கண்டறிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்காமையால் கூட்டுத்தொகை ரூபா 1,283,571,137 தொகைக்கான 09 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தன. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| பாராளுமன்றச் சட்டங்கள் | | | |
| 1947 இன் 16 இலக்க மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 225 | கணக்குகள் கணக்காய்வாளரின் சேவைக்காக நியாயமானதென நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் சான்றுபடுத்தப்படும் நிதியின் எண்ணிக்கை மாநகர சபையின் நிதியத்தில் இருந்து அவ்வப்போது திறைசேரியின் பிரதிச் செயலாளருக்கு கொடுக்க வேண்டியிருந்த போதிலும் 2016 ஆண்டு முதல் அவ்வாறு செய்திருக்கவில்லை. | நிதிக் குழு மற்றும் பொது கூட்டத்தின் அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை என தெரிவித்துக்கொள்கின்றேன். | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.7.2 பெற வேண்டிய கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | காலி அஞ்சல் அலுவலகத்திற்கு முன்பக்கமாக இருக்கும் இரண்டு மாடி கடைத் தொகுதி 20 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் கேள்விகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் அதனது குத்தகைத் தொகை 05 வருடங்களுக்கு ஒருமுறை திருத்தப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டளவில் நிலுவை குத்தகை மற்றும் தண்டப்பண கூட்டுத்தொகை ரூபா 10,076,018 தொகை காணப்பட்டதுடன், குத்தகைதாரருக்கு கடைத் தொகுதியை நடாத்திச் செல்வதற்காக வசதி வழங்கப்பட்டுள்ளது. | வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் வழக்குத் தீர்ப்பின் படி நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ஹில்டொப் விடுமுறை விடுதியின் குறிப்பிட்ட நட்டஈட்டுத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காததுடன், ரூபா 759,190 இற்கான குத்தகை தொகையையும் அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 253,560,459 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 154,028,966 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 309,416 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 253,942 தொகை பெறுமதியான 15 காசோலைகள் மதிப்பளிக்கப்படாமல் 3 – 24 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்தன. ரூபா 55,474 தொகை பெறுமதியான மீதியான மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி தொடர்பாக தகவல்கள் ஏதும் காணப்படாததுடன், இது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 183(1) இற்கு இணங்க நிறுவப்பட்டிருந்த ஊழியர் சேமிப்பு அங்கத்துவ நிதியக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 13,744,366 தொகை காணப்பட்டதுடன், அவற்றின் உரிமை தொடர்பாக அறுதியான தகவல்கள் காணப்படாமையால் சபையின் வருமானத்திற்கு அல்லது திருப்பிச் செலுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இதற்கான பதிவேடுகள் ஒன்றும் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். | இந்த நிதிகளின் உரிமையை உறுதிப்படுத்துவற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>வருடாந்தம் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுமதிப்பத்திரத்திற்காக நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் காணப்பட முடியாதிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 5,590,271 இற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் காணப்பட்டதுடன் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247அ(1) இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) மாநகர சபை அங்கத்தவர்களுக்கு கையடக்கத் தொலைபேசி வழங்கல்**<br>(i) நகர முதல்வர் மற்றும் பிரதி நகர முதல்வருக்கு 2014.07.22 திகதி கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஆண்டின் போது மீண்டும் ரூபா 99,000 தொகை பெறுமதியான 02 கையடக்கத் தொலைபேசிகள் வழங்கப்பட்டிருந்தன.<br>(ii) சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,460,300 தொகை செலவிடப்பட்டு 2012 மார்ச் இல் 17 மடிகணினிகள் ரூபா 791,982 செலவிடப்பட்டு 2014 ஒக்தோபரில் 18 டெப்கள் அங்கத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், 11 அங்கத்தவர்கள் மடிகணினிகள் மற்றும் 9 அங்கத்தவர்கள் டெப்களை திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீண்டும் ஒப்படைக்கும் படி அங்கத்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஒப்படைத்தல் மற்றும் திரும்பப் பெறல் முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் கைத்தொழில் வரி புறக்கணித்தல் தொடர்பாக 2018 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 2107 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அந்த வழக்குகளின் மூலம் ரூபா 9,073,813 தொகை சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது. அதன்படி, 2018 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டளவில் அந்த வரிப் புறக்கணிப்பு 167 சதவீத்தினால் அதிகரித்திருந்த போதிலும், இவ்வாறு நகர சபைக் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை தொடர்ந்தும் புறக்கணித்தலின் அதிகரிப்பு தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிலுவை கட்டணம் அறவீடு செய்வதற்கக வழக்குத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கை எடுப்பேன். | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆண்டின் ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி பொதுக் களஞ்சியத்தில் 587 பண்ட வகைகளைச் சேர்ந்த கூட்டுத்தொகை ரூபா 16,196,161 தொகை பெறுமதியான 21,658 பண்டங்களுக்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், 03 பொது நூலகங்களில் ரூபா 151,425 தொகை பெறுமதியான 553 நூலகப் புத்தகங்களுக்கான பற்றாக்குறை ஒன்று அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | பற்றாக்குறைகள் தொடர்பாக முறைப்பிரகாரம் செயற்பட வேண்டும். |

### 3.3 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2021 ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கூட்டுத்தொகை ரூபா 2,003,599,223 தொகை பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்வதற்காக 48 இலக்க நாட்குறிப்பு பயன்படுத்தப்பட்டிருந்தது. அவற்றை பரிசோதனை மேற்கொண்டு சான்றுபடுத்திய பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு உள்ளகப் பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

**3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கோங்கஹ மாட்டிறைச்சி விற்பனை நிலையம் 2021 ஆண்டிற்காக கேள்வி அழைக்கும் போது அதற்கான கேள்விச் சபை மற்றும் நிதிக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு தெரிவு செய்யப்பட்ட கூடிய விலை சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரர்களுக்கு வழங்காமல் பழைய ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் சபைக்கு ரூபா 2,058,258 இற்கான நட்டமொன்று ஏற்படுத்தியிருந்ததுடன், அது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | மாதாந்த குத்தகை அடிப்படையில் பேணிச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கேள்வி நடைமுறையை கடைபிடித்து குத்தகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |